சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP. 21/2016**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் நாள் வியாழக்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **எ.ம.சா.2-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| தந்தை பெயர் | கோவிந்தசாமி | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | வந்தவாசி | வயது | 59 |

**06.11.2025 முதல் விசாரணை**

1. நீதிமன்றத்திலிருந்து வந்தவாசி தெற்கு காவல் நிலைய குற்ற எண்.46/2016 சட்டப்பிரிவு 279, 337, 304A இ.த.ச.ன்படி குற்ற எண் சம்மந்தமான எங்கள் காவல் நிலையத்தில் உள்ள ஆவணங்களை சமர்ப்பிக்க அழைப்பாணை வந்தது அதன்பேரில் காவல் ஆய்வாளருக்காக சாட்சியம் அளிக்க வந்து இருக்கிறேன். நான் மேற்படி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். மேற்படி குற்ற எண் சம்மந்தமாக யார் புகார் அளித்திருக்கிறார்கள் என்றால் முகேஷ் என்பவர் புகார் அளித்திருக்கிறார். கடந்த 17.01.2016ம் தேதி புகார் அளிக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் எதிரி ஆனந்தன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி ஆனந்தன் இறந்துவிட்டதால் வழக்கு முடிக்கப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தற்போது நீதிமன்றத்தில் மேற்படி இறுதி அறிக்கையின் நகல் சமர்ப்பிக்கிறேன். அதன் அசல் ஆவணம் கொண்டுவந்திருக்கிறேன். அந்த இறுதி அறிக்கை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்த ஆவணம் வழக்கை விசாரணை செய்த அதிகாரி மூலம் தான் குறியீடு செய்யப்பட வேண்டும் என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது.)

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை காவல் ஆய்வாளர் ஜெய்சங்கர் என்பவர் பதிவு செய்து இருக்கிறார் என்றால் இல்லை உதவி ஆய்வாளர் ஜெய்சங்கர் பதிவு செய்து இருக்கிறார். முதல் தகவல் அறிக்கையின் படி TN25 AT5685 என்ற இருசக்கர வாகனத்தை நிரஞ்சன் என்பவர் ஓட்டியதாகவும் முகேஷ் என்பவர் பின்புறத்தில் அமர்ந்ததாகவும் விவரம் உள்ளது என்றால் சரிதான். கிரிக்கெட் விளையாட வந்தவாசியிலிருந்து காஞ்சிபுரம் சென்றதாக விவரம் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறார்கள் என்றால் சரிதான். இறந்து போன ஆனந்தன் TN07BW9649 என்ற இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்காக வருகிறார் என்றால் சரிதான். நிரஞ்சனுக்கும் முகேஷ்க்கும் வலது பக்கம் அடிபட்டு இருக்க வேண்டும் என்றால் சரிதான். முகேஷ்க்கு இடது கால்

முட்டி, இடது கண்ணம், வலது கண்ணம் மற்றும் நிரஞ்சனுக்கு இடது கால், முழங்கால், தாடை, தலை இடது பக்கம் அடிபட்டதாக முதல் தகவல் அறிக்கையில் விவரம் உள்ளது என்றால் சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கை படி விபத்து அடிபட்டு இருந்தால் நிரஞ்சனுக்கும் முகேஷ்க்கும் வலது பக்கம் தான் அடி பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வதற்கு முன்பு நிரஞ்சன் மீது வழக்கு பதிவு செய்ய கூடாது என்று அவரது சமுதாய மக்கள் பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. நிரஞ்சனின் சமுதாயத்தை சேர்ந்தவர் சாலை மறியல் செய்ததால் பிரச்சனை வேண்டாம் என்று ஆனந்தன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இறந்து போன ஆனந்தன் செல்போன் பேசிக்கொண்டு வந்ததாக பொய்யான குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்து போன ஆனந்தன் விபத்து சமயத்தில் செல்போன் பயன்படுத்தியதாக ஆவண கோப்புகளில் ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் கிரீன் பார்க் பள்ளி இருந்ததா என்றால் முதல் தகவல் அறிக்கையில் பள்ளி பெயர் உள்ளது. பள்ளியில் உள்ள ஆசிரியர் மற்றும் பணியாளர்களை விசாரணை செய்யப்பட்டதா என்றால் இல்லை.

3. விபத்தானது நிரஞ்சன் என்பவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நிரஞ்சனின் தவறால் நடந்தது என்றாலும் இறந்து போன ஆனந்தன் மீது தவறான முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து தகுந்த விசாரணை செய்யாமல் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து TN25 AT5685 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிய நிரஞ்சனால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.